Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

# கிரிக்கெட் லீக் போட்டிகளின் விதிமுறைகள்

## I. பொது விளக்கம் (GENERAL) :

1. கிரிக்கெட் லீக் போட்டிகளில் கலந்து கொள்ளும் உறுப்பினர் அணிகள், கீழ் வகுக்கப்பட்டுள்ள (Framed) சட்ட, திட்டங்களின் அடிப்படையில் நிர்வாகிக்கப்படும் .

2. **இங்கே கூறப்பட்டுள்ள விதிகள் அனைத்தும் 2011–2012 ஆம் கிரிக்கெட் ஆண்டு சான்று அஞ்சல் (CERTIFICATE OF POSTING) மூலம் அனைத்து அணிகளுக்கும் அனுபப்பட்ட தேதி முதல் நடை முறைக்கு வருகிறது.**

3. இந்த சட்ட, திட்டத்தில் கூறப்பட்டிருக்கும்/மாற்றப்பட்டிருக்கும் விதிகளை தவிர மற்ற எம்.சி.சி. “கிரிக்கெட் விதிகள் (2000 கோட் 4 பதிப்பு 2010 ஆம் அண்டு), பரிக்ஷார்த்த விதிகள் மற்றும் சிறப்பு விதி முறைகள் இவைகள் அனைத்தும் மற்றும் பி.சி.சி.ஐ. யால் அனுமதிக்கப்பட்ட எல்லா கிரிக்கெட் விதிகளும் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் அனைத்து “கிரிக்கெட் போட்டிகளிலும் கடைபிடிக்கப்படும்.

4. M.D.C.A என்றால் “மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கம்” என்று பொருள்.

5. மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் **E.C.** என்பது ‘நிர்வாக குழு’ என்று பொருள்.

6. மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் **L.C.** என்பது ‘லீக் துணை குழு’ என்று பொருள்.

7. “அணி’’ என்பது, குறிப்பிட்டு ஏதாவது சொல்லப்பட்டிருந்தால் / குறிப்பிட்டிருந்தாலே தவிர மற்ற நேரங்களில் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் உறுப்பினர் அணி என பொருள்படும்..

8. ‘குழு’ என்பது உறுப்பினர் அணியால் லீக் போட்டியில் விளையாட விளையாட்டு வீரர்கள் கொண்டு உருவாக்கப்படும் ஒரு குழு ஆகும்.

9. ‘’வீரர்’ என்பது, மாவட்ட “கிரிக்கெட் சங்கத்தின் ஏதாவது ஒரு உறுப்பினர் அணியில் பதிவு செய்யப்பட்ட வீரர் என்று பொருள்.

10. ‘கிரிக்கெட் காலம்/ஆண்டு’ என்பது ஒவ்வொரு ஆண்டும் ஜூன் முதல் தேதியில் இருந்து அடுத்த ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி வரையோ அல்லது லீக் துணை குழுவால் நிர்னயிக்கப்பட்ட போட்டிகளில் கடைசி போட்டி/போட்டிகள் முடியும் தேதியோ, எது பின்வருகிறதோ அது எடுத்துக்கொள்ளப்படும்.

Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

## II. லீக் துணை குழுவும் அதன் செயல்பாடும் (LEAGUE SUB COMMITTEE AND ITS FUNCTIONS):

1. நிர்வாக குழு அடுத்த லீக் துணை குழுவை உருவாக்கப்படும்வரையோ அல்லது நியமிக்கப்படும்வரையோதான் ஒரு லீக் துணைக் குழு பதவியில் இருக்கும்.

2. **லீக் துணை குழு** 5 உறுப்பினர்கள் (உதவி செயலாளர் உட்பட) கொண்டு உருவாக்கப்படுறது.

3. லீக் துணைக் குழுவின் முழு பொறுப்புகளாவன :

அ.) லீக் போட்டிகள் /மற்றும் நுழைவுப் போட்டிகள் நடத்துவது.

ஆ) நிர்வாக குழுவின் தனிப்பட்ட பார்வைக்கு வைக்கப்படும் விஷயங்கள் தவிர மற்ற அனைத்து விஷயங்களிலும் மற்றும் இங்கே உருவாக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களிலும் குறுக்கிடும்.

இ) அந்த ஆண்டு லீக் போட்டிகான சட்ட திட்டம் மற்றும் அணிகள் பங்கேற்பதற்கான டிவிஷன் மற்றும் அதன் உட்பிரிவு ஆகியவற்றை டிவிஷனில் உள்ள குழுக்களின் எண்ணிக்கையை வைத்து அதில் உள்ள உட் பிரிவுகளுக்கு சம பிகிதத்தில் பிரித்து நிர்ணயம் செய்து அனைத்து உறுப்பினர் அணிகளுக்கும் அதை அனுப்பிவைக்கிறது.

ஈ) அந்த ஆண்டு லீக் போட்டி நடைபெறுவதற்கான கால அட்டவனை/திட்டத்தை தயார் செய்கிறது.

உ) லீக் போட்டிகள் மற்றும் நுழைவுப் போட்டிகள் நடத்தும் முறை மற்றும் தேதி, இடம் இவைகள் அனைத்தும் லீக் துணைக் குழு எடுக்கும் முடிவே இறுதியானது. இது எல்லா லீக் விளையாடும் அணிகளையும் கட்டுப்படுத்தும்.

ஊ) லீக் போட்டிகள் நடத்துவது மற்றும் போட்டிகளில் ஏற்படும் இடையூறுகள் தொடர்பாக ஏற்படும் விவாதங்கள் மற்றும் விசாரணைகள் ஆகியவற்றை இங்கே வகுக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தாமே எடுத்து விசாரிக்க அதிகாரம் உண்டு.

எ) லீக் துணைக் குழு, ஒரு பொருள் அல்லது பிரச்சனை, தங்களது முடிவுக்கு அப்பாற்பட்டது என்று கருதினால், அதை ஒரு நபர் விசாரனை கமிஷனிற்கு பரிந்துரை செய்யும்.

Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

## III. அனைத்து டிவிஷன்களுக்குமான பொதுவான விதி முறைகள் (GENERAL RULES APPLICABLE TO ALL DIVISIONS) :

1. நிர்வாக குழுவால் அவ்வப்போது உருவாக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு அனைத்து அணிகளும் கட்டாயம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

2. லீக் போட்டிகளில் விளையாடும் அனைத்து அணி செயலாளர்களும்/தலைவர்களும், அவர்களுடைய அணி விளையாடும் நேரத்தில் அணி வீரர்களின் நடத்தைக்கு பொறுப்பாவார்கள். எனவே, ஒவ்வொரு அணி செயலாளர்களுக்கும் / தலைவர்களுக்கும் அவர்களுடைய அணி வீரர்கள் நன்னடத்தையுடன் நடந்து கொள்ள செய்வது கடமையாகும்.

3. லீக் போட்டிகளுக்கான அணிகள் 4 டிவிஷன்களாக பிரித்து ஒவ்வொரு டிவிஷனில் லீக் அடிப்படையில் அந்த அணி உள்ள டிவிஷனில் உள்ள மற்ற அணிகளை எதிர்த்து விளையாடும்.

4. அணிக்கான ஆண்டு சந்தா மற்றும் லீக் கட்டணம் அந்த கிரிக்கெட் ஆண்டின் ஆரம்பத்தில் நிர்வாக குழுவால் நிர்ணயிக்கப்படுவதை ஒவ்வொரு அணியும் செலுத்த வேண்டும்.

5. ஒவ்வொரு அணியும் தாங்கள் கலந்து கொள்ளும் முதல் போட்டியின் போது லீக் போட்டிக்கான கட்டணம், அணியின் ஆண்டு சந்தா, கிரிக்கெட் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய இதர கட்டணங்கள் ஏதாவது இருப்பின் அவற்றையும் செலுத்திய அசல் இரசீதினை நடுவர்களிடம் காண்பிக்கப்படவேண்டும். அல்லது **அனைத்து நிலுவைத் தொகைகளையும் போட்டிக்கு சங்கத்தால் நியமிக்கப்படும் நடுவர்களிடம் செலுத்திவிட்டு அதற்கான இரசீதை போட்டி முடிவுற்றதும் சங்க பொருளாளரிடம் பெற்றுக்கொள்ள வேண்டியது அந்தஅந்த அணிகளின் பொறுப்பாகும்.** மேலும், இரசீதை நடுவர்களிடம் காண்பிக்காத அணி(கள்) / **நடுவர்களிடம் நிலுவைத் தொகைகள் செலுத்தாத அணிகள்,** லீக் போட்டிகளில் பங்கேற்கும் தகுதியை இழந்ததாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டு அந்த போட்டியின் எதிர்அணி வெற்றிப்பெற்றதாக அறிவிக்கப்படும். போட்டியில் பங்கேற்கும் இரு அணிகளுமே மேற்படி இரசீது(களை) நடுவர்களிடம் காண்பிக்கவில்லை எனில், இரு அணிகளும் லீக் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியை இழந்ததாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டு, அந்த போட்டிகான புள்ளிகள் இரு அணிகளுக்கும் வழங்கப்படமாட்டாது. இரசீது இல்லாத அணிகள் சங்க பொருளாளரிடமிருந்து தடை இன்மைச் சான்றைப் பெற்று போட்டியின் சமயம் சமர்பிக்கவேண்டும்.

6. **போட்டிகள் நடைபெறும் தேதி மற்றும் இடம் பற்றிய விவரங்கள் அடங்கிய கடிதம் அல்லது இரத்து செய்யப்படும் விவரம், சான்றிட்ட அஞ்சல் / கூரியர் மூலமாகவோ அல்லது தனி நபர் மூலம் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ ஒவ்வொரு அணிக்கும் அதனுடைய செயலாளருக்கோ அல்லது அவருடைய ஒப்புதல் பெற்ற பிரதிநிதிக்கோ அனுப்பி வைக்கப்படும்.**

**அ) ஒவ்வொரு மாதமும் (அ) வாரமும் (அ) வேறு முறைகளிலோ லீக் போட்டிகள் நடைபெறுவதை காலத்திற்கேற்ப லீக் துணை குழு தீர்மாணிக்கும்.**

**ஆ) ஒவ்வொரு மாதமும், அந்த மாதத்தின் 28ஆம் தேதிக்குள் போட்டிகள் நடைபெறும் நாள் மற்றும் இடம் ஆகிய விவரங்கள் அடங்கிய சுற்றறிக்கையை ஒவ்வொரு அணியின் செயலாளருக்கும் மேலே தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு, லீக் துணைக்குழு அனுப்பி வைக்கும். மேற்படி சுற்றறிக்கை கிடைக்க பெறாத அணிகள் தாமதம் செய்யாமல், உடனடியாக லீக் போட்டிகளை கவனித்துக் கொள்ளும் உதவி செயலாளரையோ (அ) நிர்வாக குழுவின் உத்திரவின் பேரில் லீக் போட்டிகளை நடத்தும் பொறுப்பாளரையோ தொடர்பு கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், அதனால் அந்த அணிக்கு ஏற்படும் பின் விளைவுகளுக்கு லீக் துணைக்குழு பொறுப்பேற்காது. இது மிக முக்கியமாக ஒவ்வொரு அணியும் கடைபிடிக்க வேண்டிய விதியாகும்.**

7. லீக் போட்டிகள் சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களிலும், தேவைப்படின் வார வேலை நாட்களிலும் நடத்தப்படும்.

**அ)** சனிக் கிழமை அன்று நடத்தப்படும் லீக் போட்டிகள் கீழ் கண்ட விவரப்படி அந்த டிவிஷனில் உள்ள அணிகள் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையிலான போட்டிகளை கட்டாயம் ஒவ்வொரு லீக் வருடமும் விளையாட வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதல் ‘A’ டிவிஷன் | – | இரண்டு போட்டிகள் |
| முதல் ‘B’ டிவிஷன் | – | இரண்டு போட்டிகள் |
| இரண்டாவது டிவிஷன் | – | இரண்டு போட்டிகள் |
| மூன்றாவது டிவிஷன் | – | இரண்டு போட்டிகள் |

8. முதல் ‘A’ டிவிஷன் & முதல் ‘B’ டிவிஷன் அனைத்துப்போட்டிகளும் ஒருநாள் போட்டி அடிப்படையில் 50 ஓவர்களுக்கு மிகாமலோ அல்லது கால அவகாசத்தை பொருத்து நிர்வாக குழுவால் அந்த குறிப்பிட்ட வருடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள்/கால அளவுகளுக்கு போட்டிகள் நடத்தப்படும்.அதன் விவரம் சம்பந்தப்பட்ட அணிகளின் செயலாளர்களுக்கு தெரிவிக்கப்படும்.

இரண்டாவது & மூன்றாவது டிவிஷன் அனைத்துப்போட்டிகளும் ஒருநாள் போட்டி அடிப்படையில் 30 ஓவர்களுக்கு மிகாமலோ அல்லது கால அவகாசத்தை பொருத்து நிர்வாக குழுவால் அந்த குறிப்பிட்ட வருடத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள்/கால அளவுகளுக்கு போட்டிகள் நடத்தப்படும்.அதன் விவரம் சம்பந்தப்பட்ட அணிகளின் செயலாளர்களுக்கு தெரிவிக்கப்படும்.

9. இரு அணித்தலைவர்களும் அந்த போட்டியில் விளையாட உள்ள தங்களுடைய அணி வீரர்களுடைய பட்டியலை, பூவா தலையா போடுவதற்கு முன்னதாகவே போட்டி நடுவர்களால் வழங்கப்படும் சங்கத்தின் படிவத்தில் எழுதி அடையாள அட்டை எண் வீரர்களின் கையொப்பம் மற்றும் அணித் தலைவரின் கையொப்பத்துடன் போட்டி நடுவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். பூவா தலையா போடும் சமயம், ஒவ்வொரு அணியிலும் குறைந்தது பதிவு செய்யப்பட்ட 7 வீரர்கள் அந்த மைதானத்தில் இருக்க வேண்டும். அவ்வாறு 8 வீரர்கள் மைதானத்தில் இல்லை எனில் அந்த அணி அந்த போட்டியில் தோற்றதாக நடுவர்களால் அறிவிக்கப்படும்.

10. ஒரு போட்டியில் மொத்தம் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 5 –ல் ஒரு பங்கு என்ற விகிதத்தில் ஒரு பந்து வீச்சாளர், பந்து வீச அனுமதிக்கப்படுவார். இதில் தசம பின்னங்கள் ஏற்படும் போது, நடுவர்களின் கருத்தின்படி பந்து வீச்சாளர்களுக்கு ஓவர்கள் நிர்ணயிக்கப்படும். இதில் நடுவர்களின் தீர்பே இறுதியானது. எந்த நிலையிலும் ஒரு பந்து வீச்சாளர் அதிகபட்சமாக 10 ஓவர்கள் மட்டுமே வீச இயலும்.

11. அனைத்துப்போட்டிகளிலும்M.C.C. விதி எண் 14 (Declaration) 'ஆட்டத்தை முடித்துக்கொள்ளுதல்' தடை செய்யப்படுகிறது. மேலும் ஆட்டம் முடிக்காமல் வெளிநடப்பு செய்தல் மற்றும் மாற்று அணிக்கு விட்டுக்கொடுத்தல் ஆகியன நடைபெற்றால் அந்த போட்டிக்கான புள்ளிகள் இழக்க நேரிடும்.

12. லீக் போட்டிகள் விளையாடும் நேரம் :

முதல் 'A' & 'B' டிவிஷன் அனைத்துப்போட்டிகளும்

<u>**முதல் காலம் :காலை 09.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை**</u>
<u>**உணவு இடைவேளை :பிற்பகல் 12.30 மணி முதல் பிற்பகல் 1.10 மணி வரை**</u>
<u>**இரண்டாம் காலம் :பிற்பகல் 1.10 மணி முதல் மாலை 4.40 வரை.**</u>
<u>(எக்காரணத்தைக்கொண்டும் போட்டி மாலை 6.00 மணிக்கு மேல் நீட்டிக்க கூடாது)</u>

இரண்டாவது & மூன்றாவது டிவிஷன் அனைத்துப்போட்டிகளும்

<u>**முதல் போட்டி :காலை 08.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை**</u>

<u>**இரண்டாவது போட்டி :பிற்பகல் 1.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை.**</u>

அ) ஒவ்வொரு ஒரு மணி நேர ஆட்ட நேரத்திற்கு பிறகு ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் குடிநீருக்கான இடைவேளை வழங்கப்படும். இதற்கான நேரம் விளையாடும் நேரத்திற்குள்ளேயே அடங்கும். தேநீருக்கான இடைவேளை கிடையாது.

ஆ) ஓவர்கள் வீசுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் வீழ்த்தப்படும் ஒவ்வொரு விக்கெட் வீழ்ச்சிக்கும் இரண்டு நிமிடங்கள் வீதம் விளையாடும் நேரத்தில் சேர்த்துக்கொள்ளப்படும். (நிர்ணயிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு மேல் வீழ்த்தப்படும் விக்கெட்டுகளுக்கு இரண்டு நிமிடங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.) இதில் ஏற்படும் கால இழப்பு உணவு இடைவேளையில் சரி செய்யப்படும். இந்த சேர்க்கை ஒரு அணி ஓவர்கள் வீசுவது தொடர்பான கணக்கெடுப்பில் எடுத்துக்கொள்ளப்படும்.

13. **முதல் 'A' & 'B' டிவிஷன்**

ஆடுகளம் மற்றும் மைதானம் தயாராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் போட்டியில் பங்கேற்கும் இரு அணிகளும் போட்டி ஆரம்பிக்கும் நேரமான காலை 9.00 மணிக்கு முன்னதாக காலை 8.45 மணிக்கு விளையாட தயார் நிலையில் இருக்க வேண்டும். இரண்டு அணிகளில் ஒரு அணி விளையாட வராத நிலையில், விளையாட எல்லா தகுதியும் உடைய மற்றொரு அணியை

(அதாவது குறைந்தது 7 பதிவு செய்யப்பட்ட வீரர்களுக்கு குறையாமல் மைதானத்தில் அந்த சமயத்தில் இருக்க வேண்டும்), நடுவர்களால், காலை வேளையாக இருந்தால், காலை 9.30 மணிக்கும் இரண்டாவது வேளையாக இருந்தால் பிற்பகல் 1.40 மணிக்கும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

**இரண்டாவது & மூன்றாவது டிவிஷன்**

ஆடுகளம் மற்றும் மைதானம் தயாராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் போட்டியில் பங்கேற்கும் இரு அணிகளும் போட்டி ஆரம்பிக்கும் நேரமான காலை 8.00 மணிக்கு முன்னதாக காலை 7.45 மணிக்கு விளையாட தயார் நிலையில் இருக்க வேண்டும். இரண்டு அணிகளில் ஒரு அணி விளையாட வராத நிலையில், விளையாட எல்லா தகுதியும் உடைய மற்றொரு அணியை (அதாவது குறைந்தது 7 பதிவு செய்யப்பட்ட வீரர்களுக்கு குறையாமல் மைதானத்தில் அந்த சமயத்தில் இருக்க வேண்டும்), நடுவர்களால், காலை வேளையாக இருந்தால், காலை 8.30 மணிக்கும் இரண்டாவது வேளையாக இருந்தால் பிற்பகல் 1.30 மணிக்கும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

அ) இரண்டு அணிகளும் மேலே குறிப்பிட்ட நேரத்திற்குள் விளையாட வராத நிலையில், இரு அணிகளுக்கும் எந்த புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது.

14. ஒவ்வொரு போட்டிக்கும் கொடுக்கப்படும் புள்ளிகள் விவரம் :

1) போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு 4 புள்ளிகள் வழங்கப்படும்.

2) போட்டி ‘டிரா’ (Draw) அல்லது ‘சமன்’ (Tie) என்று முடிக்கப்பட்டால் இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் வழங்கப்படும்.

3) போட்டியில் தோற்ற அணிக்கு எந்த புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது.

**4)** அணிகள் போட்டியில் வெளிநடப்பு (Walkover) அல்லது எதிர் அணிக்கு விட்டு கொடுப்பது அல்லது போட்டிக்கு மைதானத்திற்கு வராத அல்லது விதி II (9)ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி போதுமான வீரர்கள் இல்லாமல் மாற்று அணிக்கு புள்ளிகள் வழங்கப்பட்டாலோ அல்லது இரு அணிகளுமே மைதானத்திற்கு வராமல் இருந்தாலோ, அந்த அணி / அணிகளுக்கு அவை அந்த கிரிக்கெட் ஆண்டில் எடுத்துள்ள மொத்த புள்ளிகளில் இருந்து அவ்வாறு நிகழும் ஒவ்வொரு போட்டிக்கும் 4 புள்ளிகள் கழிக்கப்படும்.

15. மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் வழங்கப்படும் பந்துகளையோ அல்லது நடுவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பந்துகளையோதான் போட்டிகளுக்கு பயன்படுத்தப்படவேண்டும்.

- ROLEX
- ROLEX SUPER
- TNCA Balls
- COBRA
- SF Yorker
- SG League / Equivalent

அ) ஒவ்வொரு அணியும் தங்களுடைய ஒவ்வொரு போட்டியின் பொழுதும் தம் சொந்த பொறுப்பில் கூடுதலாக பந்துகளை கொண்டு வருவது அவசியமாகும்.

ஆ) போட்டி நடைபெறும் சமயம் பந்து காணாமல் போனால்/பந்தின் உருவம்/நிலை மாறியதாக நடுவர்கள் கருதினால், தடுப்பு வியூகம் அமைக்கும் அணி தம்மிடம் உள்ள (நடுவர்களின் ஒப்புதலுக்குட்பட்ட) **வேறு ஒரு பந்தை 10 நிமிடங்களுக்குள் பயன்படுத்தி அந்த போட்டியை தொடர வேண்டும்.** அவ்வாறு பந்து, தடுப்பு வியூகம் அமைக்கும் அணியால் (Fielding side) வழங்கப்படவில்லை எனில் அந்த அணி தோற்றதாக நடுவர்களால் அறிவிக்கப்படும்.

இ) 'வெளி நடப்பு' (walk-over) செய்யப்படும் போட்டிகளுக்குரிய பந்துகள் விதி எண் ஐஐஐ (9)ன் படி குறைந்தது 7 வீரர்கள் மைதானத்தில் இருந்து வெற்றி பெற்ற அணிக்கு மட்டும் வழங்கப்படும்..

16. மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் / அவருடைய அனுமதி பெற்ற அதன் இணை / துணைச் செயலாளரால் வழங்கப்படும் அந்த அணி வீரர்களுக்கான புகைபட அடையாள அட்டைகளை போட்டி நடைபெறும் சமயம் அந்த போட்டிக்கான நடுவர்களிடம், அணியின் தலைவர் / செயலாளரால் காண்பிக்கப்பட வேண்டும்.

17. <u>கீழ் கண்ட விதி விலக்குகளுக்கு மட்டும் போட்டிகளுக்கு ஒத்திவைப்பு (Postponement) வழங்கப்படும்.</u>

அ) விளையாட்டு மைதானம் கிடைக்காத நிலை

ஆ) மழையின் காரணமாகவோ அல்லது மோசமான பருவ நிலை காரணமாகவோ அல்லது மோசமான மைதானத்தின் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது நடுவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினாலோ அந்த போட்டியில் ஒரு பந்து கூட போடப்படவில்லை என்றால் (இதில் போட்டி நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது)

இ) தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் மாவட்ட / மாநில அளவிலான போட்டிகளில் ஒரு அணியில் இருந்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றால்.

ஈ) ஒரு அணி அந்த கிரிக்கெட் ஆண்டில் இரு முறை மட்டுமே போட்டி ஒத்திவைப்பு <u>(Postponement)</u> பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

18. ஒரு அணியில் இருந்து அதிக பட்ச வீரர்கள் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட போட்டிகளில் பங்கேற்றாலும் எக்காரணத்தைக்கொண்டும் போட்டிக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியில் எந்த மாறுதலோ அல்லது போட்டியை ஒத்தி வைக்கவோ முடியாது. இவ்விஷயத்தில் லீக் துணைக்குழுவின் தீர்ப்பே இறுதியானது.

19. சொந்த விளையாட்டு மைதானங்கள் வைத்துள்ள அணிகள், அவர்களுடைய மைதானத்திலேயே விளையாடலாம். ஆனால், அந்த மைதானம் லீக் துணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

20. எந்த ஒரு வீரரும் மேட் பயன்படுத்தப்படும் ஆடுகளத்தில் (Matting Wickets) ஆடினால், பந்து வீசும் பொழுதும் (அ) மட்டை பிடிக்கும் பொழுதும் புல் தரை ஆடுகளத்திற்கு பயன்படுத்தப்படும் (Truf Wickets) ஆணி பதித்த பூட் மற்றும் ஸ்பைக்ஸ் ஷூ பயன்படுத்தக்கூடாது.

அ) எல்லா அணி வீரரர்களும் கட்டாயமாக வெள்ளை சீருடை மற்றும் வெள்ளை ஷூ (Shoe) அணிந்துதான் விளையாட வேண்டும். வேறு வண்ணங்களில் சீருடை மற்றும் ஷூ அணிந்து விளையாட அனுமதிக்கப்படமாட்டாது.

21. போட்டி நடத்துவதற்கு குறைந்தது, நடுவர்களுடைய குழுவால் நியமிக்கப்பட்ட ஒரு நடுவராவது விளையாட்டு மைதானத்திற்கு வந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் நடுவர்களுடைய குழுவால் நியமிக்கப்பட்ட இரு நடுவர்களுமே விளையாட்டு மைதானத்திற்கு வரவில்லை என்றால், அந்த போட்டி ஒத்தி வைக்கப்படும்.

22. நடுவர்களுடைய குழுவால் நியமிக்கப்பட்ட நடுவர்களில் ஒருவர் வராத நிலையில், வீரர்களில் ஒருவரை கொண்டோ அல்லது பார்வையாளர்களில் ஒருவரைக்கொண்டோ போட்டி நடத்தப்படும்.

23. ஒரு அணி விளையாடும் சமயம் தடுப்பு வியூகம் (Fielding Side) அமைக்கும் அணி மட்டையாளரின் கால் திசையில் (Leg side) ஐந்து தடுப்பாளர்களுக்கு மேல் நிறுத்தக்கூடாது. இதில் விதி மீறல் ஏற்பட்டால் இரு நடுவர்களில் யாராவது ஒருவரால் ‘நோ பால்’ என்று அறிவிக்கப்படும்.

24. ‘அகலப்பந்து’ மற்றும் ‘நோ பால்’ விதிகள், அந்த வருடம் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் கடைபிடிப்பது போல் கடைபிடிக்கப்படும். (Free hit *நீங்கலாக)*

25. ஒவ்வொரு தடுப்பு வியூகம் செய்யும் அணியும் (Fielding side) ஒரு மணிநேரத்திற்கு குறைந்தது 14 ஓவர்களாவது வீசி இருக்க வேண்டும். இந்த ஓவர் வீதம் அந்த அணியின் இன்னிங்ஸ் முடிவில் கணக்கிடப்படும்.

26. **முதலில் தடுப்பு வியூகம் செய்யும் அணி** நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் **நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை வீச வில்லை என்றால், நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் எவ்வளவு ஓவர்கள் வீசப்பட்டுள்ளதோ அந்த அளவு ஓவர்களே அந்த அணிக்கு மட்டை பிடிக்கும் சமயம் வீசப்படும்.** நிர்னயிக்கப்பட்ட நேரத்திற்குள் அனைத்து விக்கெட்டுகளையும் முதலில் மட்டை பிடிக்கும் அணி இழந்தால், நிர்னயிக்கப்பட்ட முழு ஓவர்களையும் இரண்டாவது மட்டை பிடிக்கும் அணி பெற தகுதி உடையவர்கள். **வீச வேண்டிய ஓவர்கள் நடுவர்களால் அனைத்து காரணிகளையும் கருத்தில் கொண்டு நிர்னயிக்கப்படும்.** நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் நடப்பில் இருக்கும் ஓவரும் முடிக்கப்பட்ட ஓவராக கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும், மீதமுள்ள நிர்னயிக்கப்பட்ட ஓவர்கள் முழுவதையும், முதலில் தடுப்பு வியூகம் செய்யும்

<u>அணி வீசி முடிக்க வேண்டும். உணவு இடைவேளையில் இதற்கான நேரம் எடுத்துக்கொள்ளப்பட்டு உணவு இடைவேளை நேரம் குறைக்கப்படும்.</u>

**<u>உதாரணமாக</u>** : 50 ஓவர்கள் கொண்ட போட்டியில் முதலில் பந்து வீசும் அணி போட்டி முடியும் நேரமான 12.30 மணிக்கு 40.1 ஓவர்கள் மட்டுமே வீசி இருந்தால் அவர்கள் மட்டை பிடிக்கும் சமயம் 41 ஓவர்கள் மட்டுமே பிடிக்க தகுதியானவர்கள். **<u>குறுக்கிடும் வெளி காரணிகள் எனப்படுவது மேட் சரிசெய்தல் மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வீர்த்தப்படும் விக்கெட் வீழ்ச்சி (2 நிமிடம் X வீழ்த்தப்பட்ட விக்கெட்டுகளின் எண்ணிக்கை) போன்றவை கருத்தில் கொண்டு நடுவர்களால் இரண்டாவதாக மட்டை பிடிக்கும் அணிக்கு வீசப்படும் ஓவர்களின் எண்ணிக்கை கூட்டியோ அல்லது அதே அளவோ நிர்ணயிக்கப்படும்.</u>**

27. இரண்டாவதாக தடுப்பு வியூகம் அமைக்கும் அணி, நடுவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை முழுவதுமாகவோ அல்லது அந்த போட்டிக்கான முடிவு பெறப்படும் வரையோ, எது முதலில் வருகிறதோ அது வரை பந்து வீச வேண்டும். எக்காரணம் கொண்டும் மாலை 6.00 மணிக்கு மேல் போட்டி நீட்டிக்கப்படமாட்டாது. காலதாமதமாக பந்து வீசும் இரண்டாவதாக தடுப்பு வியூகம் அமைக்கும் அணி மீது நடுவர்களின் அறிக்கையின் அடிப்படையில் லீக் துணைக் குழுவால் சம்பந்தப்பட்ட அணியிடம் விசாரணை நடத்தப்பட்டு தண்டனை பிரிவுகளுக்குட்பட்டு (IX (10))கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**<u>உதாரணமாக</u>** : 50 ஓவர்கள் நிர்ணயிக்கப்பட்ட போட்டியில் போட்டி முடியும் நேரமான 5.20 மணிக்கு பந்து வீசும் அணி 40.1 ஓவர்கள் மட்டுமே வீசி இருந்தால் 41 ஓவர்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டும். பின்னர் **<u>குறுக்கிடும் வெளி காரணிகள், மேட் சரிசெய்தல் மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்குள் வீர்த்தப்படும் விக்கெட் வீழ்ச்சி (2 நிமிடம் ஓ வீழ்த்தப்பட்ட விக்கெட்டுகளின் எண்ணிக்கை) போன்றவை கருத்தில் கொண்டு நடுவர்களால் அறிக்கை லீக் துணைக்குழுவின் முடிவிற்கு அனுப்பப்படும்.</u>** மேலும், நடுவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை முழுவதுமாகவோ அல்லது அந்த போட்டிக்கான முடிவு பெறப்படும் வரையோ, எது முதலில் வருகிறதோ அது வரை பந்து வீச வேண்டும். இதில் லீக் துணைக்குழுவின் முடிவே இறுதியானது.

28. போட்டி ஆரம்பிக்கும் முன் மழையின் காரணமாகவோ அல்லது மோசமான பருவ நிலை காரணமாகவோ அல்லது மோசமான மைதானத்தின் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது நடுவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினாலோ போட்டி ஆரம்பம் ஆவது தள்ளிப்போனால், கீழ் கண்டவாறு நடுவர்களால் முடிவு செய்யப்படும்.

அ) அவ்வாறு தள்ளிப்போகும் ஒவ்வொரு முழு 4 நிமிடங்களுக்கும் ஒரு ஓவர் என்ற விகிதத்தில் இரு அணிகளுக்கும் சமமாக குறைத்து வீசப்பட வேண்டிய ஓவர்கள் நடுவர்களால் நிர்ணயிக்கப்படும். இதில் வரும் பின்னங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது.

Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

ஆ) இரு அணிகளுக்கும் குறைந்தது தலா 25 ஓவர்களாவது கிடைக்கக்கூடிய நிலை இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நிர்ணயிக்கும் சமயம் குறைந்தது 3.30 மணி நேரமாவது விளையாடக்கூடிய கால அளவு இருக்க வேண்டும். இரு அணிகளுக்கு அந்த இன்னிங்ஸ் ஆரம்பிக்கும் மற்றும் முடியும் நேரம் ஓவர்களுக்கு தகுந்தவாறு மாற்றியமைக்கப்படும்.

29. போட்டி ஆரம்பிக்கப்பட்ட பிறகு முதலில் மட்டைபிடிக்கும் சமயம், மழையின் காரணமாகவோ அல்லது மோசமான பருவ நிலை காரணமாகவோ அல்லது மோசமான மைதானத்தின் காரணமாகவோ, மேட் சரி செய்யப்படுவதாலோ அல்லது வேறு ஏதாவது நடுவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினாலோ தடை ஏற்பட்டால், கீழ் கண்டவாறு நடுவர்களால் முடிவு செய்யப்படும்.

அ) அதனால் ஏற்படும் கால விரயத்திற்கு ஒவ்வொரு முழு நான்கு நிமிடங்களுக்கு ஒரு ஓவர் (பின்னங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது) வீதம் குறைக்கப்பட்டு இரு அணிகளுக்கும் சமமாக பிரிக்கப்பட்டு, முதலில் மட்டை பிடிக்கும் அணிக்கு ஓவர்கள் இலக்கு நடுவர்களால் நிர்ணயிக்கப்படும்.

ஆ) இந்த நிகழ்வில், மதிய உணவு இடை வேளை ஒத்துக்கொள்ளப்பட்ட நேரத்திற்கே விடப்படவேண்டும்.

30. இரண்டாவதாக மட்டை பிடிக்கும் அணிக்கு மேற்குறிப்பிட்ட தடை காரணமாக குறைந்த பட்சமாக 25 ஓவர்கள் விளையாட கிடைக்கவில்லை என்றால், அந்த அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழக்காமல் இருந்தால்,அந்தப்போட்டி, நடுவர்களால் 'டிரா' என்று அறிவிக்கப்பட்டு இரு அணிகளுக்கும் தலா 2 புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்படும்.

31. 25வது ஓவர் முடிவிற்கு பிறகு ஏற்படும் தடங்கல்களுக்கு ஒவ்வொரு முடிக்கப்பட்ட முழு ஓவர்களின் இறுதியில் இரு அணிகளின் சராசரி ஓட்ட விகிதம் (Simple Average run rate per over), கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டு வெற்றி தோல்வி போட்டி நடுவர்களால் நிர்ணயிக்கப்படும்.

<u>**உதாரணமாக**</u> : முதலில் மட்டை பிடித்த அணி அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களின் முடிவில் 200 ஓட்டங்கள் எடுத்துள்ளது. எனில், முதலில் மட்டை பிடித்த அணியின் ஓட்ட சராசரி 200/50 = 4 ஓட்டங்கள் ஆகும். இரண்டாவதாக மட்டை பிடிக்கும் அணி 25 ஓவர்கள் முடிவில் 105 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுகளையும் இழக்காமல் உள்ளது. எனில் இரண்டாவது மட்டை பிடித்த அணியின் ஓட்ட சராசரி 105/25 = 4.02 ஓட்டங்கள் ஆகும். இந்நிகழ்வில் இரண்டாவதாக மட்டை பிடித்த அணியின் சராசரி ஓட்ட விகிதம் முதலில் மட்டை பிடித்த அணியின் சராசரி ஓட்ட விகிதத்தைவிட அதிகம் உள்ளதால், இரண்டாவதாக மட்டை பிடித்த அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். முதலில் மட்டை பிடித்த அணி தங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தால், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை மட்டுமே சராசரி பெறுவதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

32. இரு அணிகளின் ஓட்டங்கள் சமமாக இருந்தால் அந்தப்போட்டி 'சமன்' (Tie) என்று நடுவர்களால் அறிவிக்கப்படும்.

33. M.C.C. (2000 கோட் 4 பதிப்பு 2010 ஆம் அண்டு), விதி எண் 2ல் கீழ் கண்டவாறு மாற்றப்பட்டு செயல்படுத்தப்படும்.
எந்த ஒரு தடுப்பாளரும் போட்டிக்கு நடுவே மைதானத்தின் எல்லைக்கோட்டை விட்டு நடுவரின் முன் அனுமதி பெறாமல் வெளியே செல்லவோ அல்லது உள்ளே செல்லவோ கூடாது. போட்டி ஆரம்பிக்கும் சமயத்திலும், எந்த ஒரு இடைவேளைக்கு பிறகும் நடுவர்களின் அனுமதி இன்றி மாற்று தடுப்பாளர் பயன்படுத்தக்கூடாது. **தடுப்புவியூகம் அமைத்துள்ள அணியின் ஒரு தடுப்பாளர், ஆட்டம் ஆரம்பிக்கும் சமயம் மைதானத்தில் இறங்கவில்லை என்றால் அல்லது மைதானத்தை விட்டு சென்று அல்லது ஒரு இடைவேளைக்கு / தடங்கலுக்கு பிறகு மைதானத்திற்கு வர தவறினால், அவ்வாறு மைதானத்தில் இல்லாத நேரம் 8 நிமிடங்களுக்கு மேல் சென்றால் ;**

அ) அந்த தடுப்பாளர் மொத்தம் எவ்வளவு நேரம் மைதானத்திற்கு வர தவறினாரோ குறைந்த பட்சம் அவ்வளவு நேரம் அவர் மைதானத்தில் தடுப்புவியூகம் செய்த பிறகு தான் அந்த இன்னிங்ஸில் மீண்டும் அவர் பந்து வீச இயலும்.

ஆ) அந்த வீரரின் அணி மட்டை பிடிக்கும் சமயம், அந்த வீரர், மைதானத்தில் இல்லாத நேரம் முழுவதும் மீண்டும் மைதானத்திற்கு திரும்பி தடுப்பு வியூகம் செய்யவில்லை/மைதானத்திற்கே திரும்ப வில்லை என்றால், அந்த கால அளவு முடியும் வரை அல்லது அவர் அணியின் ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்ச்சிக்கு பின்னர்தான் அவர் மட்டை பிடிக்க களம் இறங்க இயலும்.

34. போட்டியில் நடுவர்களாக பணியாற்றியவர்கள், அந்த போட்டியின் முடிவையும் மற்ற தகவல்களையும் அதாவது விளையாட்டு மைதானத்தின் நிலை பற்றியோ அல்லது அந்த போட்டி நடை பெற்ற சமயம் நடந்த விரும்பத்தகாத சம்பவங்கள் பற்றியோ அந்த போட்டி உண்மையாக ஆட வேண்டும் என்று இல்லாமல் வேறு நோக்கத்தோடு இரு அணிகளும் விளையாடியதாக நடுவர்கள் கருதினால் அது பற்றியோ, அந்த போட்டி முடிந்த இரண்டு நாட்களுக்குள் லீக் துணைக்குழுவிற்கு தெரிவிக்க வேண்டும்.

35. அணித்தலைவர்கள், அந்தப் போட்டியின் நடுவர்கள் பற்றிய கமுக்க (Confidential report) அறிக்கை, மைதானத்தின் நிலை மற்றும் பொதுவான நிலை பற்றி போட்டி முடிந்த இரண்டு நாள்களுக்குள் லீக் துணைக்குழுவிற்கு அனுப்பலாம்.

36. போட்டி நடந்த சமயம் விரும்பத்தாகத சம்பவங்கள் நடைபெற்றதாக லீக் துணைக்குழுவிற்கு, போட்டியில் விருப்பமுடைய நபர்களிடம் இருந்து தகவல் கிடைக்கப்பெற்றால், லீக் துணைக்குழு, அது தொடர்பாக போட்டி முடிந்த ஏழு நாட்களுக்குள் அந்த போட்டிக்கு நடுவர்களாக பணியாற்றியவர்களிடம் விளக்கமான உண்மை விவர அறிக்கையை கோரி பெறும்.

## IV. பதிவு செய்வதற்கான தகுதிகள் (QUALIFICATIONS FOR REGISTRATION) :

1. லீக் போட்டிகளில் விளையாடுவதற்கு ஒரு வீரரின் பெயர் பதிவு செய்வதற்கான தகுதிகள் பின்வருமாறு :

அ) மதுரை மாவட்டத்தில் பிறந்தவராக (அ) குடியிருப்பவராக இருக்க வேண்டும். மேலும் மதுரை மாவட்டத்தில் பிறந்தவராக / குடியிருப்பவராக இருப்பவர் அவருடைய இருப்பிட விலாசத்தை நிருபிக்க அவருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சான்றுகளில் பிறப்புச் சான்று, குடியுரிமை சான்று (Nativity Certificate) / குடும்ப அட்டை / தேர்தல் ஆணைய அடையாள அட்டை (EVI)/வருமான வரி எண் அட்டை (PAN Card)/ கடவுச் சீட்டு (Passport) / கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயில்பவராக இருந்தால் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட அடையாள அட்டை (Identity Card) ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை தேவைப்படும் சமயம் காண்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும். (தற்காலிக இருப்பிடச் சான்று (Temporary Residential Certificate) ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

ஆ) மதுரை மாவட்டத்தில் பிறந்தவராக இருந்து, தற்சமயம் வேறு மாவட்டங்களில் கல்வி பயில்பவர் (அ) பணி நிமித்தமாக வேறு மாவட்டத்திற்கு சென்று அங்கு பணியாற்றுபவர், அந்த மாவட்டத்தில் விளையாடாமல் இருக்க வேண்டும்.

2. மதுரை மாவட்டத்தில் லீக் போட்டிகளில் விளையாடுபவர்கள், சென்னை லீக் போட்டிகளில் விளையாடலாம். அவர்களுக்கு மேற்கண்ட துனை விதி (1)(ஆ) பொருந்தாது.

## V. பதிவு செய்தல் (REGISTRATION) :

1. வீரர்களின் பெயர் பதிவு, ஒவ்வொரு கிரிக்கெட் வருடமும், சம்பந்தப்பட்ட வீரர் அந்த ஆண்டு விளையாட உள்ள அணியின் வாயிலாக பதிவுறு படிவம் (REGISTRATION FORM) மூலம் புதிப்பிக்கப்பட வேண்டும்.

2. பெயர் பதிவு செய்யப்பட்ட வீரர் மட்டுமே மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் லீக் போட்டிகளில் பங்கேற்க முடியும்.

3. அணியின் செயலாளர், தம்முடைய அணியில் பதிவு செய்யப்படும் வீரர்கள் அனைவரும் பதிவு செய்வதற்கான அணைத்து தகுதிகளும் பெற்றுள்ளனர் என்று சான்றளிக்க வேண்டும்.

4. **ஒரு அணியில் 30 வீரர்களுக்கு மேல் பதிவு செய்ய இயலாது.**

**(அ) அந்த ஆண்டு பதிவு செய்த வீரர் அந்த அணிக்காக அந்த ஆண்டு எந்த லீக் போட்டிகளிலும் விளையாடாமல் இருந்து தங்கள் அணியில் விளையாட அனுமதிக்கவில்லை / விளையாட விருப்பப்படவில்லை என்றால் விண்ணப்பகடிதம் மூலம் அந்த வீரர் / வீரர்கள் பதிவை அந்த அணி இரத்து செய்து விட்டு அதற்க பதிலாக வேறு வீரர்களை பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு இரத்து செய்யப்படும் வீரர்களின் அடையாள அட்டைகளை மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் வசம் ஒப்படைக்க வேண்டும்.**

**(ஆ) அந்த ஆண்டு பதிவு செய்த வீரர் அந்த அணிக்காக அந்த ஆண்டு எந்த லீக் போட்டிகளிலும் விளையாடாமல் இருந்து அந்த அணியில் விளையாட அனுமதிக்கவில்லை / விளையாட விருப்பப்படவில்லை என்றால் விலகல் கடிதம்**

**மூலம் அந்த வீரர் தமது பதிவை அந்த அணியில் இரத்து செய்து விட்டு அதற்க பதிலாக வேறு அணிக்கு பதிவு செய்து கொள்ளலாம்.**

5. பூர்த்தி செய்யப்படாத பதிவுறு படிவமோ / அடையாள அட்டையோ அல்லது பூர்த்தி செய்யப்பட்ட அடையாள அட்டையோ கிழிந்தோ அல்லது காணாமல் போனாலோ மறு பகர்ப்பு (Duplicate) பதிவுறு படிவம் / அடையாள அட்டை வழங்குவதற்கு கட்டணமாக ஒரு படிவத்திற்கு / அடையாள அட்டைக்கு ரூ.50/- ஐ (ரூபாய் ஐம்பது மட்டும்) சங்க பொருளாளரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6. மேற்கண்ட விதிகள் (1,2,3,4) மற்றும் விதி IV துணை விதி 1(அ) கல்வி நிறுவனங்களுக்கான அணிகளில் விளையாடும் வீரர்களுக்கு பொருந்தாது. மேற்கண்ட நிறுவனங்கள் சார்பாக விளையாடும் வீரர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் அந்த வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள புகைப்பட அடையாள அட்டையை ஒவ்வொரு போட்டியின் சமயமும் நடுவர்களிடம் காண்பிக்க வேண்டும்.

7. ஒவ்வொரு அணியும் ஒவ்வொரு வருடமும் வீரர்களின் பதிவுறு படிவம் (Players' Name Registration forms) (அ) அந்த கிரிக்கெட் வருடம் நிர்வாக குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் ஒரு படிவம் மூலம் வீரர்களின் பெயர்களை பட்டியலிட்டு சங்க செயலாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும். விளையாட இருக்கும் முதல் லீக் போட்டிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும்.

   அ) பதிவுறுபடிவங்கள் சங்க செயலாளருக்கு கிடைக்கப்பெறாவிட்டால், சமர்பிக்காத அணி, அந்த கிரிக்கெட் ஆண்டிற்கான லீக் போட்டிகளில் பங்கேற்க இயலாது.

   ஆ) பதிவுறுபடிவங்களை சமர்பிக்காத வீரர்கள், சங்கத்தில் பதிவு செய்யப்படாத வீரர்களாக கருதப்படுவார்கள்.

8. ஒரு அணியில் கடந்த கிரிக்கெட் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வீரர், நடப்பு ஆண்டில் அந்த அணிக்கு விளையாடமல்/விளையாட விருப்பப்படாமல் இருந்தால் அந்த வீரர்களின் கடந்த ஆண்டின் அடையாள அட்டைகளை மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் வசம் ஒப்படைக்கவேண்டும்.

## VI. மாறுதல் மற்றும் பதிவு நீக்கம் (TRANSFER AND CANCELLATION OF REGISTRATION):

1. **ஒவ்வொரு கிரிக்கெட் ஆண்டு துவக்கத்திலும், ஒரு வீரர், ஒரு அணியில் இருந்து மற்றொரு அணிக்கு மாறுவதை, எந்த ஒரு அணியும் தடை செய்ய முடியாது. அவ்வாறு மாறும் சமயம், அவர் ஏற்கனவே கடந்த ஆண்டில் விளையாடிய அணியின் செயலாளருக்கு எழுத்து மூலமான விலகல் கடிதம் அளித்துவிட்டு அதன் நகலை மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.**

2. கீழ் கண்ட விதி விலக்கு தவிர, ஒரு வீரர் ஒரு அணிக்கு பதிவு செய்து விட்டு வேறு ஒரு அணிக்கு அதே கிரிக்கெட் ஆண்டில் விளையாட முடியாது.

அ) ஒரு வீரர் தாம் பணியாற்றும் நிறுவனம்/துறை/கல்வி நிறுவனம் சார்பாக அந்த நிறுவனம்/துறை/கல்வி நிறுவனம் நடத்தும் போட்டிகளில் அவை மதுரை கிரிக்கெட் சங்கத்தால் அங்கீகரிக்கப்படாத/ஒப்புதல் அளிக்கப்படாத போட்டிகளாக இருந்தாலும் பங்கேற்கலாம்.

3. ஒரு வீரர் நடப்பு ஆண்டில் ஒரு அணிக்கு மேல் தமது பெயரை பதிவு செய்து இருந்தால், அந்த வீரர் அந்த குறிப்பிட்ட ஆண்டில் எந்த அணிக்கும் விளையாட முடியாது.

## VII.மண்டலம் மற்றும் அதன் உட்பிரிவில் வெற்றி பெற்றவர்கள் (CHAMPIONS OF DIVISIONS AND WINNERS):

1. ஒவ்வொரு டிவிஷனில் எந்த அணி அதிக புள்ளிகள் எடுத்துள்ளதோ, அந்த அணி, அந்த டிவிஷனில் வெற்றி பெற்ற அணியாக அறிவிக்கப்படும்.

## VIII.நிலை உயர்த்துதல் நிலை தாழ்த்துதல் மற்றும் நுழைவு போட்டி (PROMOTION , RELEGATION AND ENTRANCE MATCH) :

1. இங்கு வகுக்கப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் அணிகளை ஒவ்வொரு கிரிக்கெட் ஆண்டு முடிவின் பொழுதும் ஒவ்வொரு டிவிஷனில் உள்ள பிரிவு வாரியாக அணிகள் அந்த கிரிக்கெட் ஆண்டில் பெற்ற புள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் அணிகள் இறங்கு வரிசைப்படி வரிசைப்படுத்தப்படும். இதன் அடிப்படையில் கீழ் கண்டவாறு அணிகளை நிலை உயர்த்துதல் மற்றும் நிலை தாழ்த்துதல் தீர்மாணிக்கப்படும்.

**நிலை உயர்த்துதல்:**

அ) முதல் ‘B’ டிவிஷனில் உள்ள ஒவ்வொரு பிரிவிலும் அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள முதல் இரு அணிகள் முதல் ‘A’ டிவிஷனுக்கு நிலை உயர்த்தப்படும்.

ஆ) இரண்டாவது டிவிஷனில் உள்ள ஒவ்வொரு பிரிவிலும் அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள முதல் இரு அணிகள் முதல் ‘B’ டிவிஷனுக்கு நிலை உயர்த்தப்படும்.

இ) மூன்றாவது டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள முதல் இரு அணிகள் இரண்டாவது டிவிஷனுக்கு நிலை உயர்த்தப்படும்.

**நிலை தாழ்த்துதல்:**

அ) முதல் “A” டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள கடைசி இரு அணிகள் முதல் ‘B’ டிவிஷனுக்கு நிலை இறக்கப்படும்.

முதல் "B" டிவிஷனில் உள்ள அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் அதில் உள்ள கடைசி இரு அணிகள் இரண்டாது டிவிஷனுக்கு நிலை இறக்கப்படும்.

ஆ) இரண்டாது டிவிஷனில் உள்ள ஒவ்வொரு பிரிவிலும் அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள கடைசி இரு அணி மூன்றாவது டிவிஷனுக்கு நிலை இறக்கப்படும்.

இ) மூன்றாவது டிவிஷனில் உள்ள ஒவ்வொரு பிரிவிலும் அணிகள் பெற்றுள்ள மொத்த புள்ளிகளின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள கடைசி இரு அணிகள் மட்டும் லீக் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்படும். அவற்றின் உறுப்பினர் பதிவு மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் இருந்து தானாகவே நீங்கிவிடும்.

ஈ) மூன்றாவது டிவிஷனில் இருந்து வெளியேற்றப்படும் அணி மீண்டும் லீக் போட்டிகள் விளையாட விரும்பினால், லீக் துணைக்குழுவால் நடத்தப்படும் நுழைவுப்போட்டிகளில் விளையாடி தகுதி பெற வேண்டும். இந்த அணிக்கு நுழைவு போட்டியில் கலந்து கொள்ள முன்னுரிமை அளிக்கப்படும். நுழைவு போட்டிக்கான நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை இவ்வணிகள் செலுத்த வேண்டும்.

2. ஒரு டிவிஷனில் உள்ள அணிகளில் எந்த அணி உயர்வு பெற்று செல்கிறது அல்லது எந்த அணி தாழ்வு பெற்று செல்கிறது என்பதை தீர்மாணிக்கும் சமயம் ஏற்படும் பிரச்சனைகளை கீழ் கண்டவாறு லீக் துணைக்குழு தீர்மானிக்கும். இதன் முடிவே இறுதியானது.

அ) ஒரு டிவிஷனில் உள்ள இரு பிரிவுகளில், அந்த அந்த பிரிவுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அணிகள் உயர்வு/தாழ்வு பெறும் போது சமமான புள்ளிகள் ஒன்றுக்கும் மேற்பட்ட அணிகள் பெற்றிருந்தால், அந்த அணிகள் அவர்களுக்கிடையில் முன்பு நடைபெற்ற போட்டிகளில் எந்த அணி வெற்றி பெற்றுள்ளததோ அந்த அணி தகுதி உயர்த்தப்படும்/தாழ்த்தப்படும்.

ஆ) ஒரு அணி, ஒரு போட்டியில், அதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களுக்குள்ளேயே அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தால், அந்த போட்டிக்கு அந்த அணிக்கு எவ்வளவு ஓவர்கள் நிர்ணயிக்கப்பட்டதோ அத்தனை ஓவர்களையும் அந்த அணி விளையாடியதாக கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இ) இந்த நிலையிலும் சமமாக இருப்பின், அந்த அணிகள், அந்த கிரிக்கெட் ஆண்டுக்கான மொத்த லீக் போட்டிகளில் எடுத்த ஓட்டங்களை அவை எதிர்க்கொண்ட சட்ட பூர்வமான பந்துகளால் வகுக்கப்பட்டு சராசரி பெறப்பட்டு அதன் அடிப்படையில் அதிக சராசரி உள்ள அணி நிலை உயர்வு பெற்றதாக நிர்ணயிக்கப்படும்.

ஈ) இதுவும் சமமாக இருந்தால் அந்த அணிகள் அந்த கிரிக்கெட் ஆண்டில் பங்கேற்ற அனைத்து லீக் போட்டிகளிலும் இழந்த விக்கெட்டுக்களின் அடிப்படையில் சராசரி பெறப்பட்டு அதன் அடிப்படையில் அதிக சராசரி உள்ள அணி நிலை உயர்வு பெற்றதாக நிர்ணயிக்கப்படும்.

3. 'வெளி நடப்பு' (walk-over) அல்லது 'விட்டுக்கொடுப்பது' (conceding) என்ற முறையில் ஒரு அணி புள்ளிகளை பெற்று இருந்து, அந்த அணி மேல் டிவிஷனுக்கு உயர்வு பெறும் போது அல்லது தாழ்வு பெற்று கீழ் டிவிஷனிற்கு செல்லும் போது இந்த அணியுடன் மற்ற அணி அல்லது மற்ற அணிகள் சமமான புள்ளிகளை எடுத்திருப்பின் ஓட்ட விகிதம் கணக்கிடும் சமயம் 'வெளி நடப்பு' அல்லது 'விட்டுக்கொடுப்பது' என்ற முறையில் ஒரு போட்டியில் புள்ளிகள் பெற்றிருந்தால் கீழ் கண்டவாறு தீர்மாணிக்கப்படும்.

**அ)** 'வெளி நடப்பு' (walk-over) அல்லது 'விட்டுக்கொடுப்பது' (conceding) என்ற முறையில் விளையாடிய அணிக்கு **அந்த போட்டியில் 0 ஓட்டங்கள் 50 ஓவர்களில் எடுத்ததாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.**

ஆ) 'வெளி நடப்பு' (walk-over) அல்லது 'விட்டுக்கொடுப்பது' (conceding) என்ற முறையில் ஒரு போட்டியில் ஒரு அணி புள்ளிகளை பெற்றிருந்தால், அந்த அணிக்கான அந்த கிரிக்கெட் ஆண்டிற்கான சராசரி ஓட்டம் கணக்கிடும் சமயம் இந்தப் போட்டி கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

4. **நுழைவுப் போட்டிகள் :**

அ) வருடம் புதியதாக அணிகள் சேர்க்க, அந்த வருடம் விளம்பரம் / அறிக்கை மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும். புதியதாக நுழைவு போட்டியல் பங்கேற்க விரும்பும் அணிகள், அதற்குரிய விண்ணப்ப படிவத்தை சங்க செயலாளரிடம் பெற்று அதில் கேட்கப்பட்டிருக்கும் தகவல்கள் பூர்த்தி செய்து சங்க செயலாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்ப படிவத்துடன் நுழைவுக் போட்டிக்கான கட்டணம் (Entrance Match Fees) ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) புதிதாக வரும் அணிகள் செலுத்த வேண்டும். முதல் வரும் 16 அணிகளுக்கு மட்டுமே (வெளியேறும் அணியும் சேர்த்து) Knock-out முறையில் நுழைவுப் போட்டி நடத்தப்பட்டு அதில் இரு அணி தேர்வு செய்யப்படும். நுழைவுப் போட்டிக்கான கட்டணம் அவ்வப்போது சங்க செயலாளரால் மாற்றி அமைக்கப்படும். மேற்படி கட்டணத்தை கட்ட தவறியவர்கள் அந்த நுழைவுப் போட்டியில் விளையாட அனுமதிக்கப்பட்மாட்டார்கள். இதனால் எதிர் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

ஆ) அந்த வருடம் லீக் போட்டியில் இருந்து வெளியேறிய / வெளியேற்றப்பட்ட அணிகள் தவிர்த்து, ஏனய அணி புதியதாக நுழைவு போட்டியில் கலந்து கொண்டு, வெற்றி பெற்று சங்க லீக் போட்டியில் விளையாட தகுதி பெற்ற ஏழு நாட்களுக்குள் 'புதிய அணி'க்கான நுழைவுக் கட்டணம் (New Team's Entrance Fees) ரூ.1000/- யும் (ரூபாய் ஆயிரம் மட்டும்) அணியின் வருட சந்தா தொகை மற்றும் அந்த வருடம் அறிவிக்கப்பட்ட லீக் போட்டிக்கான கட்டிணத்தையும் சேர்த்து மொத்தமாக சங்க பொருளாளரிடம் செலுத்தி அதற்கான இரசீது

Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படி செலுத்தத் தவறினால், அந்த அணி லீக் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.

## நுழைவுப் போட்டிகளின் போது கடைபிடிக்கப்படும் விதி முறைகள்

1) **உடன் முடிந்த / கடந்த கிரிக்கெட் ஆண்டில் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்க லீக் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட அணிக்கு பதிவு செய்த வீரர்களைத் தவிர ஏனைய அணிகளுக்கு பதிவு செய்த வீரர்கள், நுழைவுப் போட்டிகள் நடைபெறவுள்ள கிரிக்கெட் ஆண்டிற்கான நுழைவுப்போட்டிகளில் விளையாட கூடாது.**

2) **உடன் முடிந்த / கடந்த கிரிக்கெட் ஆண்டில் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்க லீக் போட்டிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட அணி, தங்கள் அணிக்கு அந்த ஆண்டு பதிவு செய்த வீரர்கள் மட்டுமே நுழைவுப்போட்டிகளில் விளையாடலாம். பதிவு செய்யப்பட்ட வீரர்களில் அடையாள அட்டையை போட்டி நடைபெறும் சமயம் நடுவரிடம் காண்பிக்க வேண்டும்.**

3) புதிய அணிகள் தங்கள் அணியில் விளையாட உள்ள வீரர்களின் பதிவுறு படிவங்களை (Players' registration form) போட்டி நடைபெறுவதற்கு 2 நாட்களுக்கு முன்பாக சங்க செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைக்க தவறிய அணிகள் அந்த வருட நுழைவுப்போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டாது.

4) நுழைவுப் போட்டிகளுக்கென இங்கு தனியாக வகுக்கப்பட்டுள்ள விதிகளுடன் சேலம் மாவட்ட கிரிக்கெட் லீக் போட்டிகளுக்கான விதி முறைகளும் இந்த போட்டிகளுக்கு பொருந்தும்.மதுரை மாவட்ட கிரிக்கெட் லீக் போட்டிகளுக்கான விதி முறைகளை மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்க பொருளாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

5) அனைத்துப்போட்டிகளும் நாக் அவுட் (knock out) அடிப்படையில் ஒவ்வொரு அணிக்கும் 30 ஓவர்கள் வீதம் நடைபெறும்.

6) லீக் போட்டிகள் / நுழைவுப் போட்டிகளில் ஏதாவது பிரச்சனைகள் எழுந்தால் அதற்கான முடிவை லீக் துணைக்குழு எடுக்கும். அனைத்து பிரச்சனைகளுக்கும் லீக் துணைக்குழுவின் முடிவே இறுதியானது.

7) **இறுதிப் போட்டியில் வெற்றிபெறும் அணி நடப்பு கிரிக்கெட் ஆண்டிற்கான மதுரை மாவட்ட கிரிக்கெட் லீக் போட்டிகளில் விளையாட தகுதி பெறும்.**

8) **வெற்றிப்பெற்ற அணியில் விளையாடிய / பதிவு செய்த வீரர்கள் நடப்பு கிரிக்கெட் ஆண்டில் நடைபெறும் லீக் போட்டிகளில் அந்த அணிக்காக மட்டுமே விளையாட வேண்டும். வேறு அணிகளுக்கு விளையாடக்கூடாது. இந்த அணிக்குமாறுதல் மற்றும் பதிவு நீக்க விதிகள் (VI) பொறுந்தாது.**

9) அனைத்து அணிகளும் வெள்ளை சீருடை மற்றும் வெள்ளை ஷீ (shoe) வுடன், சொந்த விளையாட்டு உபகரணங்களுடன் போட்டிக்கு விளையாட வரவேண்டும்.

10) வேறு ஏதேனும் விதிமுறைகள் நுழைவு போட்டி நடத்தும் சமயம் தேவைப்பட்டால் அந்த வருடம் நுழைவுப் போட்டியில் பங்கேற்கும் அணிகளுக்கு லீக் துணைக் குழுவால் தெரிவிக்கப்படும்.

11) நுழைவுப் போட்டியில் பங்கேற்கும் அணிகள் ஏதேனும் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்க விதிகளை மீறி (அ) மதிக்காமல் நடந்தால் அவ்வணி நுழைவு போட்டியில் இருந்து வெளியேற்றப்படும்.

12) நுழைவுப் போட்டிகளில் ஏதாவது ஒரு போட்டியின் சமயம் இரு அணிகளின் ஓட்டங்கள் சமமாக இருந்தால் (tie) (விக்கட் வீழ்ச்சி, ஓவர்கள் வீசப்பட்டது ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது) அல்லது ஏதாவது காரணத்திற்காக போட்டி பாதியிலேயே கைவிடும் நிலை ஏற்பட்டால், அந்தப் போட்டிக்கான முடிவு இரு அணித் தலைவர்கள், போட்டி நடுவர்களின் முன்னிலையில் பூவாத் தலையா மூலம் நிர்ணயிக்கப்படும்.

13) நுழைவுப் போட்டிகளுக்கு இங்கு வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு மீறி எந்த ஒரு நுழைவுப்போட்டியும் நடை பெற்றிருப்பதாக ஓர் அணி கருதினால், அந்த அணி தன் எதிர்ப்பு முறையீடுகளை மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் லீக் துணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

14) அனைத்து எதிர்ப்பு முறையீடுகளும் எழுத்து மூலமாக சர்ச்சைக்குரிய போட்டி முடிவுற்ற **இரண்டு மணிநேரத்திற்குள்** அந்த அணியின் செயலாளரால் லீக் துணை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

15) ஒரு நுழைவுப் போட்டியின் இடையில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டு முறையீடு செய்ய விரும்பினால், அந்த அணி, முறையீட்டிற்கான முகாந்திரத்தை அறிக்கையாக எழுதி அந்த அணித் தலைவரால் (Captain) கையொப்பம் இடப்பட்டு அந்த போட்டிக்கான நடுவர்களிடம் ‘எதிர்ப்பு முறையீட்டுக்கு உட்பட்டு’ விளையாடுகிறோம் என்று தெரிவித்து, அந்த அறிக்கையை கொடுக்க வேண்டும். பின்னர் அந்த போட்டி முடிவுற்றதும் முழு தகவல்களை அந்த அணியின் செயலாளரால் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் லீக் துணைக்குழுவிற்கு சமர்பிக்க வேண்டும்.

16) ஒவ்வொரு எதிர்ப்பு முறையீட்டிற்கம் திரும்ப வழங்கப்படாத (Non refundable) ரூ.500/-ஐ (ரூபாய் ஐநூறு மட்டும்) ரொக்கமாக எதிர்ப்பு முறையீட்டு கட்டணமாக லீக் துணைக் குழுவிடம் செலுத்தி விண்ணப்பத்தை சமர்பிக்க வேண்டும்..எதிர்ப்பு முறையீட்டு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

17) லீக் துணைக்குழு எதிர்ப்பு முறையீட்டு மனுக்களை விசாரணை செய்து அதன் அறிக்கையை சம்பந்தப்பட்ட அணிகள் அடுத்து விளையாட இருக்கும் போட்டிக்கு முன்னதாக தெரிவிக்கும். இதன் முடிவே இறுதியானது. மேல் முறையீடு செய்ய இயலாது. இது அனைத்து நுழைவு போட்டியில் பங்கேற்கும் அணிகளையும் கட்டுப்படுத்தும்.

Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

## IX. தண்டனை பிரிவுகள் (PENAL PROVISIONS) :

1. மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு அணி வீரரும், எந்த ஒரு சூழ்நிலையிலும், எந்த இடத்திலும், மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பணியாற்றும் எந்த ஒருஅலுவலக பொறுப்பாளரையும் (Office bearers) கேலி, கிண்டல் மற்றும் தரக்குறைவான வார்த்தைகளால் திட்டினாலோ அல்லது பேசினாலோ அந்த சம்பந்தப்பட்ட வீரரை, லீக் துணைக்குழு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குழுவால், நடவடிக்கை எடுக்கப்பட்டு அவரது ஒழுங்கீனத்தைற்கு ஏற்றார்போல், மேற்படி குழுவின் முடிவின்படி தண்டனை வழங்கப்படும். அம்மாதிரி வழங்கப்படும் தண்டனை அவரது ஆயுட்காலம் வரை விளையாடவோ அல்லது செயல்பாட்டுக்கோ அல்லது இரண்டுக்குமோ தடை விதிக்கப்படும்.

2. பதிவு விதிகளை மீறும் எந்த வீரரின் பதிவும் தானாகவே இரத்தாகிவிடும்.

3. ஒரு அணியில், அந்த அணிக்காக பதிவு செய்யப்படாத வீரர், அந்த அணிக்கு லீக் போட்டியில் விளையாடினால், அந்த குறிப்பிட்ட போட்டியில் அந்த அணி தோற்றதாக அறிவிக்கப்படும்.

4. வீரர்களின் பதிவு விதி பிரிவு எண்: IV, V & VI ஐ எந்த ஒரு அணி வீரராவது மதிக்காமல் விளையாடினால், அந்த வீரர், அந்த கிரிக்கெட் அண்டில் தொடர்ந்து லீக் போட்டியில் பங்கேற்க்கும் தகுதியை இழப்பதுடன், அடுத்து வரும் இரண்டு கிரிக்கெட் ஆண்டுகளிலும் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும்/ஒப்புதலுடன் நடத்தப்படும் போட்டிகளில் கலந்து கொள்ள தடை விதிக்கப்படும்.

5. எந்த ஒரு அணியும் மேற்கண்ட விதி 3 மற்றும் 4ஐ மீறுவது தெரிந்திருந்தும், வேண்டும் என்றே விதி மீறலில் ஈடுபட்டால் அந்த அணி அந்த கிரிக்கெட் வருட லீக் போட்டியில் தொடர்ந்து பங்கேற்கும் தகுதியை இழப்பதுடன் மேலும் அடுத்து வரும் கிரிக்கெட் வருடத்திற்கும் லீக் போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும்.

6. இந்த காரணத்திற்காகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு காரணத்திற்காகவோ லீக் போட்டிகளில் விளையாட 'தகுதி இழப்பு' செய்யப்பட்டால், அந்த அணி, தனக்கு விதிக்கப்பட்ட தடை/தண்டனை காலத்தை அனுபவித்து முடித்த பிறகு லீக் போட்டியில் உள்ள கடைசி மண்டலத்தில் விளையாட நுழைவுப்போட்டியில் இங்கு வகுக்கப்பட்டுள்ள நுழைவுப் போட்டிக்கான விதிகளின் அடிப்படையில் தகுதி பெற்றுதான் லீக் போட்டியில் மீண்டும் விளையாட முடியும்.

7. ஒரு அணியை, அந்த வருட லீக் போட்டிகள் நடந்து கொண்டிருக்கும் சமயம் நடுவில் 'தகுதி இழப்பு' மற்றும் போட்டிகளில் விளையாட தடை இவைகள் விதிக்கப்பட்டால், மேற்படி தண்டனை பெற்ற அணி, இந்த சம்பவம் நடப்பதற்கு முன்பு விளையாடி அதன் எதிர் அணிகள் வெற்றி பெற்றிருந்தால், அந்த அணிகளிடம் இருந்து அந்த வெற்றி புள்ளிகள், விளையாடாத மற்ற அணிகள் பாதிக்கப்படுவது தவிர்க்கும் பொருட்டு திரும்ப பெறப்படும்.

8. எந்த ஒரு அணியாவது எதிர் அணிக்கு 'சாம்பியன் பட்டம்' பெறுவதற்கு ஏதுவாகவோ அல்லது 'சாம்பியன் பட்டம்' பெறுவதை தவிர்பதற்காகவோ அல்லது உயர் டிவிஷன் செல்வதற்காகவோ அல்லது கீழ் டிவிஷன் செல்லாமல்

இருப்பதற்காகவோ வேண்டும் என்றே எதிர் அணிக்கு விட்டு கொடுப்பதை அல்லது வெளிநடப்பு பற்றி புகார் பெறப்பட்டு, அது நிருபிக்கப்பட்டால், அந்த அணி லீக் போட்டியில் தொடர்ந்து பங்கு பெற 'தகுதி' இழக்கிறார்கள். மேலும் அடுத்து வரும் ஒரு வருட லீக் போட்டிகளிலும் பங்கேற்க தடையும் செய்யப்படும்.

9. இரண்டாவதாக தடுப்பு வியூகம் அமைக்கும் அணி ஓவர்கள் வீசுவதற்கு நடுவர்களால் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கால அளவுக்கு மேல் எடுத்துக்கொண்டு அது நடுவர்களால் அறிக்கை அளிக்கப்பட்டு, லீக் துணைக் குழுவின் விசாரணையில் உறுதி செய்யப்பட்டால், அந்த அணிக்கு அந்த போட்டி போட்டியில் கால தாமதமாக வீசப்படும் ஒவ்வொரு ஓவருக்கும் தலா ரூ.25/– (ரூபாய் இருபத்தி ஐந்து மட்டும்) வீதம் அபராதமாக விதிக்கப்படும். இந்த அபராத தொகையை அந்த அணி கட்டத்தவறினால் மேற்கொண்டு எதிர் வரும் போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அ) இதற்கு பிறகு மேற்படி அபராத தொகை கட்டிய அந்த அணி தனது அடுத்துவரும் போட்டியின்போது அபராத தொகை கட்டிய இரசீதுகளை போட்டி நடுவர்களிடம் காட்டவேண்டும். காட்டத்தவறினால் விதி III துணைவிதி 5ன்படி அந்த போட்டி தீர்மாணிக்கப்படும்.

10. மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் பதிவு செய்யப்பட்ட ஒரு வீரர் அவர் விளையாடும் அணிக்க தெரியாமல் வேறு மாவட்டத்தின் லீக் போட்டிகளில் கலந்து கொள்வது தெரிந்தால், அந்த வீரர் எதிர் வரும் ஐந்து வருடங்களுக்கு எந்த மட்டத்திலும் கிரிக்கெட் போட்டிகள் விளையாடுவதில் இருந்து தடை செய்யப்படுவார்.

## X. எதிர்ப்பு முறையீடுகள் (PROTESTS) :

1. இங்கு வகுக்கப்பட்டுள்ள விதிகளுக்கு மீறி எந்த ஒரு போட்டியும் நடை பெற்றிருப்பதாக ஓர் அணி கருதினால், அந்த அணி தன் எதிர்ப்பு முறையீடுகளை மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் லீக் துணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

2. அனைத்து எதிர்ப்பு முறையீடுகளும் எழுத்து மூலமாக சர்ச்சைக்குரிய போட்டி முடிவுற்ற இரண்டு நாட்களுக்குள் அந்த அணியின் செயலாளரால் லீக் துணை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒரு லீக் போட்டியின் இடையில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டு முறையீடு செய்ய விரும்பினால், அந்த அணி, முறையீட்டிற்கான முகாந்திரத்தை அறிக்கையாக எழுதி அந்த அணித் தலைவரால் (Captain) கையொப்பம் இடப்பட்டு அந்த போட்டிக்கான நடுவர்களிடம் 'எதிர்ப்பு முறையீட்டுக்கு உட்பட்டு' விளையாடுகிறோம் என்று தெரிவித்து, அந்த அறிக்கையை கொடுக்க வேண்டும். பின்னர் அந்த போட்டி முடிவுற்றதும் முழு தகவல்களை அந்த அணியின் செயலாளரால் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் லீக் துணைக்குழுவிற்கு சமர்பிக்க வேண்டும்.

4. ஒவ்வொரு எதிர்ப்பு முறையீட்டிற்கும் **திரும்ப வழங்கப்படாத** (Non refundable) ரூ.750/- ஐ (ரூபாய் எழுநூற்று ஐம்பது மட்டும்) ரொக்கமாக எதிர்ப்பு முறையீட்டு கட்டணமாக சங்க பொருளாளரிடம் செலுத்தி அதற்குரிய இரசீது நகலுடன்

விண்ணப்பத்தை சமர்பிக்க வேண்டும். எதிர்ப்பு முறையீட்டு கட்டணம் செலுத்தப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

5. லீக் துணைக்குழு எதிர்ப்பு முறையீட்டு மனுக்களை, நிர்வாக குழுவால் நியமிக்கப்பட்ட ஒரு நபர் எதிர்ப்பு முறையீட்டு ஆணையத்திடம் விசாரணைக்காக ஒப்படைக்கும். இந்த ஆணையம் தமது விசாரணையை, மனுவை பெற்ற 7 தினங்களுக்குள் முடிக்கும்.

6. ஒரு நபர் எதிர்ப்பு முறையீட்டு ஆணையத்திற்கு, சம்பந்தப்பட்ட மற்றும் தேவைப்படும் நபர்களை நேரில் அழைத்து விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்பே அவர்களின் அறிக்கை அல்லது வாக்கு மூலத்தை பதிவு செய்யும் அதிகாரம் உண்டு.

7. ஒரு நபர் எதிர்ப்பு முறையீட்டு ஆணையம் தம்முடைய அறிக்கையை, விசாரணை முடிவுற்ற ஏழு வேலை நாட்களுக்குள் லீக் துணைக்குழுவிடம் சமர்பிக்கும். லீக் துணைக்குழு அந்த அறிக்கையை பரிசீலித்து அதன் இறுதி முடிவை, ஒரு நபர் எதிர்ப்பு முறையீட்டு ஆணையத்தின் அறிக்கை கிடைக்கப்பெற்ற 15 வேலை நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட அணிகளுக்கு தெரிவிக்கும்.

8. லீக் துணைக்குழுவின் முடிவின் மீதான மேல் விசாரணை செய்யும் அதிகாரம் நிர்வாக குழுவிற்கு உண்டு.

9. மேற்படி லீக் துணைக்குழுவின் முடிவில் ஏதாவது ஆட்சேபனை இருந்தால் சம்பந்தப்பட்ட அணி **திரும்ப வழங்கப்படாத** (Non refundable) மேல் முறையீட்டு கட்டணம் ரூ.1000/- ஐ (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலுத்தி, முடிவு வெளியிடப்பட்ட மூன்று வேலை நாட்களுக்குள் அதற்குரிய இரசீது நகலுடன் நிர்வாக குழுவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

10. நிர்வாக குழு தன் விருப்பப்படி விசாரணைக்கு தேவையானவர்களை விசாரித்தும், மேலும், இந்த முறையீட்டிற்கு தொடர்புடைய, ஏற்கனவே அதனிடம் உள்ள பதிவேடுகள்/பொருட்கள்/சாட்சிகளின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

11. மேல் முறையீடு மீதான இறுதி முடிவை, நிர்வாக குழு, முழு விசாரணை முடிந்ததும் கூடிய விரைவில் வெளியிடும். இந்த முடிவை, அணிச்செயலாளரோ அல்லது அணித்தலைவரோ அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட நபர்களோ எதிர்க்க அதிகாரம் கிடையாது.

## XI. வீரர்களின் நடத்தை தொடர்பான விதிகளின் பயன்பாடு, குறுக்கீடு மற்றும் செயல்படுத்துதல் (APPLICATION, INTERPRETATION AND ENFORCEMENT OF PLAYERS CODE OF CONDUCT) :

1. விளையாட்டு வீரர்களும், அணியின் பொறுப்பாளர்களும் எல்லா நேரங்களிலும் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நியமிக்கப்படும் நடுவர்களின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். வீரர்கள், நடுவர்களின் முடிவுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியாது.

2. விளையாட்டு வீரர்கள், அணியின் பொறுப்பாளர்கள் மற்றும் அணி வீரர்களுக்கு தெரிந்த பார்வையாளர்கள் ஆகியோர் நடுவர்களையோ அல்லது இன்னொரு

Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

வீரரையோ பழிக்கவோ, அடிக்கவோ அல்லது அடிக்க முயற்ச்சிக்கவோ செய்யக்கூடாது.

3. விளையாட்டு வீரர்கள் மற்றும் அணியின் பொறுப்பாளர்கள் நடுவர்களை நோக்கி தகாத வார்த்தைகளால் திட்டவோ அல்லது கீழ் தரமான செய்கைகள் செய்து காண்பிக்கவோ கூடாது.

4. எந்த ஒரு வீரரோ அல்லது அணியின் பொறுப்பாளர்கள் போதை பொருட்கள், மது போன்ற லாகிரி வஸ்துகளை உபயோகித்து அதன் மயக்கத்தில் விளையாட்டு மைதானத்தில் இருந்தால் அந்த வீரரையும் மற்றும் அணியையும் அந்த கிரிக்கெட் வருடத்திற்கான எஞ்சிய போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட போட்டியில் எதிர் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். மேலும், அடுத்து வரும் கிரிக்கெட் வருடத்திற்கும் அந்த அணி லீக் போட்டிகளில் பங்கேற்க தடையும் விதிக்கப்படும்.

5. விளையாட்டின் தார்மீக கோட்பாடுகளை பாதிக்கும் விதமாக குறை கூறி எந்த ஒரு விளையாட்டு வீரரோ அல்லது அணியோ அல்லது அணி நிர்வாகிகளோ பொது இடங்களில் அறிக்கை வெளியிடுவதோ (Public Pronouncement) அல்லது செய்தி ஊடகங்களில் (Media comment) செய்தி வெளியிடுவதோ கூடாது. மீறினால் கடுமையான விதி மீறலாக கருதப்படும்.

6. அறிக்கை சமர்ப்பித்தல் :

அ ) **<u>விளையாட்டு மைதானத்திற்குள் (on the field)- அறிக்கை</u>**:
ஒரு நடுவர் அல்லது நடுவர்கள்/அணி செயலாளர், விளையாட்டு மைதானத்திற்குள் (On the field) ஒரு வீரரின் நடத்தை/விதி மீறல் தொடர்பாக அறிக்கை சமர்பிக்க விரும்பினால், எழுத்து மூலமாக மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் லீக் போட்டிகளை நடத்தும் உதவி செயலாளருக்கு சம்பந்தப்பட்ட போட்டி முடிந்த ஒரு நாளுக்குள் ‘கமுக்கம்’ (Confidential) என்று எழுதப்பட்டு ஒட்டப்பட்ட உறைக்குள் போட்டு சமர்பிக்க வேண்டும்.

ஆ) **<u>விளையாட்டு மைதானத்திற்கு வெளியே (off the field) – அறிக்கை</u>** :
ஒரு நடுவர் அல்லது நடுவர்கள்/அணி செயலாளர், விளையாட்டு மைதானத்திற்குவெளியே ஆனால் விளையாட்டு நடத்தப்படும் பகுதியில் (offences which occurs off the field but with in the premises of the ground) ஒரு வீரரின் நடத்தை அல்லது விதி மீறல் தொடர்பாக அறிக்கை சமர்பிக்க விரும்பினால் எழுத்து மூலமாக மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளருக்கு சம்பந்தப்பட்ட போட்டி முடிந்த ஒரு நாளுக்குள் ‘கமுக்கம்’ (Confidential) என்று எழுதப்பட்டு ஒட்டப்பட்ட உறைக்குள் போட்டு சமர்பிக்க வேண்டும்.

**7. <u>விளையாட்டு மைதானத்தில் நடுவர்களின் நடவடிக்கை</u> :**

(i) ஒரு பந்து வீச்சாளர் விளையாட்டு மைதானத்திற்குள் தரக்குறைவான வார்த்தைகள் பயன்படுத்தினாலோ அல்லது கீழ் தரமான செய்கைகள் செய்தாலோ அல்லது ஒழுக்க மீறலில் ஈடுபட்டாலோ அதாவது கீழ் கண்ட செயல்கள் ஈடுபட்டால் :

அ) நடுவர்களையோ அல்லது மட்டையாளரையோ அல்லது வேறு வீரர்களையோ அல்லது பார்வையாளர்களையோ பார்த்து தகாத முறையில் நடந்து கொண்டால்,

ஆ) நடுவரின் முடிவுகளுக்கு வெளிப்படையாக அதிருப்தி காண்பித்தாலோ அல்லது நடுவர்களையோ அல்லது மட்டையாளரையோ அல்லது பார்வையாளர்களையோ அடித்தாலோ;

இ) ஸ்டெம்புகளை எட்டி உதைத்து தவறாக நடக்க முயன்று ஆட்டத்தின் தார்மீக கோட்பாடுகளை சிதைக்க செய்தால் ;

உடனடியாக நடுவர்கள் 'இறந்த பந்து' (Dead Ball)என்று அறிவித்து, சம்பந்தப்பட்ட பந்து வீச்சாளரை தொடர்ந்து பந்து வீச அனுமதிக்கக்கூடாது. அவருக்கு பதில் வேறு ஒரு பந்து வீச்சாளரை தொடர்ந்து அந்த ஓவரை வீச அனுமதிக்க வேண்டும். இந்த மாற்று பந்து வீச்சாளர் வீசிய ஓவர், அந்த பந்து வீச்சாளருக்கு ஒரு முழு ஓவராக கருதப்படும்.

(ii) பந்து வீச்சாளர் அல்லாமல் வேறு ஏதாவது தடுப்பாளர் மேற்கூறப்பட்ட செயல்களில் ஈடுபட்டால் சம்பந்தப்பட்ட அணியின் தலைவரை அழைத்து சம்பந்தப்பட்ட தடுப்பாளரை ஆட்டத்தில் இருந்து வெளியேற்ற உத்திரவிட வேண்டும். மேலும் அந்த வெளியேற்றப்பட்ட வீரருக்கு பதில் மாற்று வீரரை தடுப்பாளராக அனுமதிக்கக் கூடாது.

(iii) மட்டையாளர் மேற்கூறப்பட்ட தகாத செயல்களில் ஈடுபட்டால் அல்லது நடுவரின் தீர்ப்புக்கு கட்டுபடாமல் எதிர்ப்பு தெரிவித்து தகாத செயல்களில் ஈடுபட்டால் நடுவர்கள் அந்த அணித்தலைவரை அழைத்து சம்பந்தப்பட்ட மட்டையாளரை வெளியேற்ற அறிவுறுத்த வேண்டும். அந்த அணியே தகாத செயல்களில் ஈடுபட்டால், அந்த அணியை மேற்கொண்டு விளையாட அனுமதிக்காமல் எதிர் அணி அந்த போட்டியை வென்றதாக அறிவிக்க வேண்டும்.

(iv) மேற்கண்ட நடவடிக்கைகளை நடுவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பார்பட்ட காரணங்களால் சம்பந்தப்பட்ட நடுவர்களால் ஆடுகளத்திலேயே எடுக்க இயலவில்லை எனில் அந்த நடத்தை மீறல் தொடர்பாக இங்கு கூறப்பட்டுள்ள விதிகளை அனுசரித்து லீக் துணைக்குழுவிற்கு அறிக்கை அளிக்கலாம்.

## 8. வீரர்களின் நடத்தை தொடர்பான தண்டனைகள் (Players code of conduct penal provisions) :

அ) விதி மீறல்களுக்கு,ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகளில் விளையாட தடை அல்லது எச்சரித்து விடுதல் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனையாக சம்பந்தப்பட்ட வீரர்/அணிக்கு வழங்கப்படும். மிகக்கடுமையான விதி மீறல்களுக்கு, சம்பந்தப்பட்ட வீரர்/அணிக்கு, மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் லீக் போட்டிகளில் மீதம் உள்ள கிரிக்கெட் வருடத்திற்கு எஞ்சியுள்ள போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்பட மாட்டாது.

Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

ஆ) விதி மீறல் மிகக்கடுமையான தன்மை உடையதாக இருந்து, சம்பந்தப்பட்ட வீரர்/வீரர்கள் பங்கேற்கும் அணி அந்த போட்டியில் வெற்றி பெற்றிருந்தாலும், அந்த போட்டியில் எதிர் அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்.

இ) மிகக்கடுமையான விதி மீறல், அந்த கிரிக்கெட் ஆண்டின் கடைசி பகுதியில் நிகழ்ந்தால், அந்த வருடத்தில் மீதம் உள்ள போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்படுவதுடன், அந்த வருடத்திற்கு அடுத்து வரும் வருடத்திலும் சம்பந்தப்பட்ட வீரர்/அணி, லீக் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்படமாட்டாது.

ஈ) சொந்த விளையாட்டு மைதானம் வைத்திருந்து அதில் அந்த அணிகள் விளையாடும் சமயம் மேற்குறிப்பிட்டப்படி கடுமையான விதி மீறல் நடைபெற்று, அதன் வீரர்/வீரர்கள்/அணி மீது இது தொடர்பாக புகார் எழுப்பப்பட்டிருந்தால், அந்த மைதானத்தில் சம்பந்தப்பட்ட அணிக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகளை விளையாட அனுமதி மறுக்கப்படும்.

உ) விதி மீறல் மிக கடுமையாக இருந்து, அதனால் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கோ அல்லது அதன் நிர்வாகிகளுக்கோ களங்கம் ஏற்படும் என்று நிர்வாக குழு மற்றும் லீக் துணைக்குழு கருதினால், பெறப்பட்ட புகாரின் அடிப்படையில், விதி மீறலில் ஈடுபட்ட அணி (அ) வீரர்(கள்) அல்லது சேர்த்தோ ஒழுங்கு நடவடிக்கை குழுவிற்கு (Disciplinary committee) அனுப்பி அங்கு விதி மீறல் உறுதி செய்யப்பட்டால், அதிக பட்ச தண்டனையாக சம்பந்தப்பட்டஅணிகளுக்கு மற்றும் வீரர்களுகளுக்கு வாழ்நாள் முழுவதும் கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்படும்.

## 9. <u>ஒழுங்கு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள்</u> :

நன்னடைத்தை விதி மீறல்கள் மற்றும் இந்த அத்தியாயத்தில் தெரிவித்துள்ள இதர முறைகேடுகள் தொடர்பாக விசாரிப்பது, லீக் துணைக்குழு/நிர்வாக குழு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை குழு ஆகியவற்றின் பணியாகும்.

அ) ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன், அதற்குரிய அறிவிக்கையை சம்பந்தப்பட்டவர்களுக்கு முறையாக தெரிவிக்கப்பட்ட பின்பு, மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர், அந்த புகார் மீது விசாரிப்பது தொடர்பான நடவடிக்கையை, நடைமுறை சாத்தியகூறுகளின் அடிப்படையில், கூடிய விரைவில் முடிவு எடுப்பார்.

ஆ) விசாரணையின் சமயம், அந்த விசாரணைக்கு ஆட்பட்ட நபர், அவருடைய அணித்தலைவர் மற்றும் அந்த அணியின் செயலாளர் மற்றும் அந்த புகாரை அனுப்பியவர் அந்த புகாருக்கு தேவை எனகருதும் சாட்சியங்களை கொண்டு தங்கள் தரப்பு வாதத்தை வைக்க அனுமதிக்கப்படுவர். விசாரணைக்கு ஆட்பட்ட நபர், அந்த விசாரணையில் கலந்து கொள்ளாவிட்டாலும், விசாரணை தொடர்ந்து நடத்தப்பட்டு, ஒரு தலைபட்சமான தீர்ப்பு வழங்கப்படும்.

இ) இவ்வாறு வழங்கப்படும் ஒரு தலைபட்சமான தீர்ப்பே இறுதியானது. அது எக்காரணத்தைக்கொண்டும் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

உ) லீக் துணைக்குழு / ஒழுங்கு நடவடிக்கை குழு மற்றும் நிர்வாக குழு, சம்பந்தப்பட்ட விதி மீறல் அல்லது வேறு ஒழுங்கீனங்கள் தொடர்பாக தமது விசாரணையை மேற்கொண்டு அதன் முடிவை விசாரணை முடிவுற்ற ஏழு தினங்களுக்குள் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு நிர்வாக குழுவிடம் சமர்பிக்கும்.

எ) விசாரணையை தள்ளிபோட அல்லது ஒத்திவைக்க கோரி வைக்கப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

10. நிர்வாக குழுவின் தீர்ப்பின் முடிவின் மீது மேல் முறையீட்டை, மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் விதி 25ன் படி நடுவர் தீர்ப்புக் குழுவிடம் (Arbitration Committee) மேல்முறையீடு செய்யலாம். இந்த நடுவர்கள்தீர்ப்புக் குழுவின் (Arbitration Committee) தீர்ப்பே இறுதியானது. இதை மீறி எந்த ஒரு அணி (அ) வீரர்கள் (அ) நிர்வாகிகள் நீதி மன்றங்களை அனுக கூடாது.

11. <u>**ஆவனங்கள்**</u> :

அ) நிர்வாக குழுதான், அனைத்து பதிவேடுகள் மற்றும் புகார் அறிக்கைகள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பான ஆவனங்களை பாதுகாக்க வேண்டும்.

ஆ) மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர், மேற்கண்ட அறிக்கைகளை கமுக்க கோப்பில் (Confidential File) வைத்து எதிர்கால வழிகாட்டுதலுக்காக பாதுகாப்பார்.

## <u>XII.மாற்றுதல் மற்றும் பிற்சேர்க்கைகள் (ALTERATION AND AMENDMENTS) :</u>

1. அனைத்து விதிகள் மற்றும் நடைமுறைகள், மாற்றப்படவோ, பிற்சேர்க்கை சேர்க்கவோ, நீக்கவோ அல்லது புதிய விதிகள் சேர்க்கவோ, மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் நிர்வாக குழுவிற்கு அதிகாரம் உண்டு.

2. மேற்கூறப்பட்ட மாறுதல்கள், சேர்க்கைகள், நீக்கல்கள், மாற்று விதிகள் ஆகியன, நிர்வாக குழுவால் அங்கீரிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர் அணிகளுக்கும் தெரிவிக்கப்படும்.

இந்த புத்தகத்தில் தெரிவிக்கப்படாத தேவைப்படும் விவரங்கள் ஏதேனும் இருப்பின், அவை தொடர்பான விதிகளை தேவைப்படின் நிர்வாக குழு இயற்ற அதிகாரம் உண்டு.

இந்த புத்தகத்தில் ஏதேனும் எழுத்துப்பிழையோ/அச்சுப்பிழையோ இருப்பின், அப்பிழைகளை எழுத்துமூலம் எவராவது சுட்டிக்காட்டினால், அதை நிர்வாக குழு ஆராய்ந்து அவற்றை நீக்க/திருத்த முடிவு எடுக்கும்.

தலைவர்
மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கம்

செயலாளர்
மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கம்

Madurai District Cricket Association
A47, Raja Street, Near Bala Gurugulam School
Subramaniapuram
Madurai-625 011
email: maduraidca@gmail.com / maduraidca@yahoo.com
www.mdca.in

**III (5) எந்த ஒரு அணியும், மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்கத்திடம் எந்த ஒரு நிலுவைத்தொகையும் செலுத்தப்படாமல் இருந்தால், அந்த அணி போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது.**

IX (2) விதி எண் ஐஐஐ -ல் துணை விதி எண் 4-ல் குறிப்பிட்டுள்ள தொகையினை கட்டத் தவறிய அணிகள் உடனடியாக லீக் போட்டிகளில் இருந்து விலக்கப்படுவார்கள். இந்த அணிகள், அந்த வருடம் லீக் போட்டிகள் முடிந்த பின்னர் அவை இருந்த டிவிஷனிலிருந்து கீழ் டிவிஷனுக்கு நிலை விதி ஏஐஐஐ, துணை விதி 2 ஐ அனுசரித்து தாழ்த்தப்படுவார்கள்.